பம்மல் நாகல்கேணித் தமிழ்ச் சங்க மாத இதழ்


# யாதும் ஊரே

ஐப்பசி (நவம்பர்–2004) விலை உ.ரு.5/- இதழ் : 7



செந்தமிழ்க் காவலர் பேரா. இலக்குவனார்

(17.11.1910 - 03.09.1973)





# யாதும் ஊரே

**பல்சுவை திங்கள் இதழ்**

திருவள்ளுவர் ஆண்டு 2035

ஐப்பசி மாதம் (10.11.2004)


**உயிர் ஈகம் செய்கிறேன்!**

"தமிழ்மொழிக்காக யாரோ பலியாக வேண்டும்; அவர்களில் நான் முதலாளாக இருக்கிறேன்."

– பேரா. சி. இலக்குவனார்


ஆசிரியர், வெளியிடுபவர்:

**நா.வை. இங்கர்சால்**

**(நா.வை.சொக்கலிங்கம்)**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ.60/- |
| ஐந்தாண்டுக் கட்டணம் | ரூ.300/- |
| பத்தாண்டுக் கட்டணம் | ரூ.600/- |
| புரவலர் கட்டணம் | ரூ.3000/- |
| தனி இதழ் : | ரூ.5.00 |



**தொடர்புக்கு :**

**நா.வை. சொக்கலிங்கம்**

**"யாதும் ஊரே" (இதழ்)**

6, ஆனந்தன் தெரு,

திருவள்ளுவர் நகர்,

பம்மல், சென்னை - 600 075.

**தொ.பே. 044-2248 5166**



படைப்புகள் அனைத்தும் எழுத்தாளர்களின் கருத்தே. அதில் இடம் பெற்றுள்ள கருத்துகளுக்கு அவர்களே பொறுப்பாளர்கள். – ஆசிரியர்


## தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் வெல்லட்டும்!

மாண்புயர்ந்த பொருள்களிலே
ஏதோ ஒன்றாய்
வைப்பதல்ல தாய்மொழி;
நம் வாழ்வுக்கெல்லாம்
ஆணியச்சும் அடிவேரும்
ஆதலாலே, -
அதற்கிணையோ இவ்வுலகில்
ஒன்றுமில்லை!

- என்று அறுதியிட்டுச் சொன்னார், தமிழ் வேழம் சாலையார். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் தமிழர்கள் வாழ்ந்த போது தமிழ் அங்கெல்லாம் எங்கெங்கும் பரவி யிருந்தது. தமிழின் மேன்மையைத் தொன் மையை அறியாத தமிழர்களால், அதன் தனித் தன்மையைக் காப்பாற்ற முடியவில்லை.

ஆரியர்களின் நுழைவும் அத்து மீறலும் அவர்கள் சமற்கிருதமும் தமிழை உள்வாங்கிக் கொண்டன. இதன் பயனாக இந்தியாவில் பல மொழிகள் உருவாக்கப்பட்டன. தமிழ் இந்திய மொழிகளின் தாயாகும்.

"தமிழருடைய பழமையை நோக்குங் கால் ஆரியருடைய பழமையானது இப் பொழுது பெறும் தொலைவரிச்(தந்தி) செய்தியை ஒத்தது" என்று அறிஞர் கிராண்ட், தமிழோடு ஒப்பிடுங்கால் சமற் கிருதம் மிகமிகப் பிற்பட்டது என்பதைத் தெளிவாகவே எடுத்துரைத்துள்ளார்.

இன்று வந்தேறிகளின் சமற்கிருதம் 'இந்துத்துவா' வேடத்துடன் படையெடுத்து வருகிறது.

அன்று முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், பசுமலை நாவலர் பாரதியார், பாவாணர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி, பேராசிரியர் இலக்குவனார், மூதறிஞர் வ.சுப. மாணிக்கம், புரட்சிக் கவிஞர் முதலானோர் தமிழை அரியணை ஏற்றிட தமிழியக்கம் கண்டனர்.

இந் நாளில் தமிழர் விழிப்புணர்வு கொண்டு விட்டார்கள் என்பதற்கு இரண்டு போராட்டக்களங்களைச் சொல்லலாம். முதலாவது, தமிழ்ச் சான்றோர் பேரவை, தமிழ் அமைப்புகளுடன் இணைந்து தமிழ்ப் பயிற்று மொழிக்காக நடத்திய ஊர்வலமும் (சென்னை சைதை முதல் வள்ளுவர் கோட்டம் வரை) வள்ளுவர் கோட்டம் முன்பு நடைபெற்ற பட்டினிப் போராட்டமும் ஆகும்.

இரண்டாவது, தலைநகர்த் தமிழ்ச் சங்கமும், தமிழ் அமைப்புகளும் இணைந்து பெங்களூர், திருவனந்தபுரம், தில்லி ஆகிய நகரங்களில் செம்மொழிக் காகவும், மைய ஆட்சியில் ஆட்சி மொழிகளில் தமிழை ஒன்றாக்கவும் நடைபெற்ற அறிஞர்கள் பெருமக்கள் கலந்து கொண்ட மாநாடுகளும், தில்லியில் நாடாளுமன்றம் முன்பு நடைபெற்ற பட்டினிப் போராட்டமும் ஆகும்.

வள்ளுவர் கோட்டம் முன்பு நடத்திய பட்டினிப் போரில், தமிழறிஞர்கள், தமிழ்ப் பற்றாளர்கள் மட்டுமே கலந்து கொண் டார்கள். தில்லியில் நடைபெற்ற பட்டினிப் போரில் - அப் பட்டினிப் போர் 'சாகும் வரை' என்றில்லாவிட்டால், நாங்களும் கலந்து கொள்கிறோம் என்று அரசியல் கட்சித் தலைவர்களும் நிபந்தனை விதித்துப் பங்கேற்றனர்.

அன்று, தமிழுக்காகத் தமிழறிஞர் களும், தமிழ்ப் பற்றாளர்களும் மட்டுமே போராடும் நிலை இருந்தது. செம்மொழி அறிவிப்புக்குப் பின், நிலைமை தலைகீழாக மாறியதுபோல் தோன்றுகிறது. தமிழை அரியணை ஏற்ற மறுப்போமானால், தங்களுக்கு அரியணை (பதவி நாற்காலி) கிடைக்காமல் போய்விடும் என்று கட்சித் தலைவர்கள் எண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

தொடக்ககாலம் முதல் தமிழுக்காகப் பழ.நெடுமாறன் அவர்களும் தொல். திருமாவளவனும் போராடி வருவதை தமிழ் அமைப்புகள் நன்றியுடன் ஏற்றுக் கொண்டுள்ளன. சில கட்சித் தலைவர்கள் தமிழ் அமைப்புகளின் போராட்டத்திற்கு வெளியிலிருந்து 'தார்மீக ஆதரவு' தந்ததை நாம் அறிவோம். அவ்வப்போது, மருத்துவர் ச.இராமதாசு அவர்களும், 'ஒரு மொழிக் கொள்கை'யில் உறுதியாக இருப்பதை வெளிப்படையாகத் தெரிவித்தே வந்துள்ளார்.

இன்று நல்வாய்ப்பாக, தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் பழ. நெடுமாறன், மருத் துவர் ச. இராமதாசு, தொல். திருமாவளவன், மருத்துவர் ந. சேதுராமன் ஆகியோர்களின் தலைமையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம், தமிழுக்கு நல்வாய்ப்பே என்று வரவேற்கிறோம். தமிழ் அமைப்புகளின் பொறுப் பாளர்களும் சேர்க்கப்பட் டிருக்கின்றனர். மாவட்டங்களிலும் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் பொறுப் பாளர்கள் நியமிக்கப்பட்டு மாநிலந் தழுவியதாக விரிவாக்கப்படவேண்டும்.

நவம்பர் 2, 8, 15, 22, 29, திசம்பர் 8, 13, 20, 27 ஆகிய நாள்களில் அடையாளப் போராட்டமாகத் தொடர் போராட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இப் போராட் டங்களில் எவ்வித தயக்கமும் காட்டாமல் தமிழ் அமைப்புகள் கலந்து கொள்ள வேண்டும்.

1965-இல் பேராசிரியர் இலக்குவ னார் நடத்த முற்பட்ட 'தமிழ் உரிமைப் பெரு நடைப்பயணம்' - 1967-இல் ஆட்சி மாற்றத்திற்கு அடிகோலியது.

அன்றைய ஆட்சியாளர்கள் பேராசிரியரைக் கைது செய்ய முற்படும் போது, "தமிழ் மொழிக்காக யாரோ பலியாக வேண்டும்; அவர்களில் நான் முதலாளாக இருக்கிறேன்" என்று அரிமா இலக்குவனார் உரைத்தாராம். இதனையே குளுரையாக ஒவ்வொரு தமிழ்ப் பற்றாளரும் உரைத்து, அதன்படி ஒழுக முன்வர வேண்டும். வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில், 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' தமிழகத்தில் மணக்கப் பாடுபடும், கட்சிகளே கூட்டணித் தலைமைப் பொறுப்பு ஏற்கும் வகையில், தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் போராட்டக் களம் விரிவு படுத்தப்படவேண்டும்.

1967-இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் தமிழுக்குத் துரோகம் செய்து ஆங்கிலத்தை உயர்த்திப் பிடிக்க உதவியது.

2006-இல் ஏற்படவிருக்கும் ஆட்சி மாற்றம் 'எல்லாம் தமிழுக்கே' என்னும் நிலையில் உறுதியாக நிற்போம். எதிர்ப்பையும் துரோகத்தையும் முறியடிப்போம்! வெல்க தமிழ்! ●





## தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்

### தொடர் போராட்டங்கள்

**நவம்பர் 15**

திருமணங்களைத் தமிழ் மரபு முறைப்படி நடத்தக் கோரித் திருமண மண்டபங்களின் முன் முழக்க அட்டைகள் ஏந்தி அறவழி ஆர்ப்பாட்டம்.

**நவம்பர் 22**

தமிழைப் பயிற்று மொழியாக்கக் கோரிப் பள்ளி-கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்

**நவம்பர் 29**

நடுவர் மன்றங்களில் விசாரணைகள் உள்ளிட்ட அனைத்தையும் தமிழிலேயே நடத்தக் கோரி உயர்நீதிமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம்

**திசம்பர் 8**

தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தக் கோட்டை முன் ஆர்ப்பாட்டம்

# தமிழினமே எழு!

### அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழியாக்கு!

பாராளுமன்றத்தில் இந்தியுடன் ஏனைய மொழிகட்குச் சமநிலை கொடுக்கப்படவில்லை. கூட்டரசு மொழிகள் அனைத்திற்கும் சம உரிமை அளிக்கப்படவில்லையேல் கூடி வாழும் கொள்கை உறுதிப்படாது. "எம்மொழிக்கு உரிமையில்லா இடத்தில் எமக்கென்ன வேலை" எனக் கூறிப் பாராளுமன்றத்தைப் புறக்கணிக்கும் சூழ்நிலை உருவானாலும் உருவாகும். அச் சூழ்நிலை உருவாகாது அனைத்து மொழிகட்கும் சமநிலை உடனே கொடுக்கவேண்டும்.

- பேரா. இலக்குவனார்

# நெடுமாறன் விடையளிக்கிறார்



**வினா:** வீரப்பன் சாவு பற்றி பல விதமான செய்திகள் வருகின்றனவே! உண்மை என்ன ?

– க. மணி, திருச்சி

**விடை:** அதிரடிப்படை கூறுவது போல வீரப்பன் சாவு நடைபெறவில்லை என மனித உரிமை ஆர்வலர்கள் குழு கூறியுள்ளது. புதைக்கப்பட்ட வீரப்பனின் உடலைத் தோண்டியெடுத்து மீண்டும் வெளி மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் பரிசோதனை செய்தால் பல உண்மைகள் வெளிவரக் கூடும்.

வீரப்பனைக் காட்டு மனிதனாக ஆக்கியது அதிகார வர்க்கமும், ஊழல் அரசியல்வாதிகளுமே. வீரப்பனை உயிரோடு பிடித்தால் இவர்களைப் பற்றிய பல உண்மைகள் வெளிவரக் கூடும் என கருதியவர்கள் அவர் கதையை முடித்து விட்டனர்.

**வினா:** தமிழக ஆளுநர், உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் மாற்றப்பட்ட பின்னணி என்ன ?

- அழகுநம்பி, சென்னை

**விடை:** ஆளுங்கட்சிக்குச் சாதகமாக இருவரும் நடந்து கொண்டவர்கள் என்பது ஊரறிந்த செய்தி. மேலும் தலைமை நீதிபதிக்கு எதிராக வழக்கறிஞர்கள் பெரும் போராட்டம் நடத்தினார்கள். தமிழர் வரலாற்றில் இது போன்ற நிலை இதற்குமுன் ஏற்பட்டதில்லை.

ஆளுநர் அவ்வாறே முதலமைச்சர் என் என்பதற்குள் எண்ணெயாகி நின்றார். அமைச்சர்கள் விலக்கப்படும் போது அதற்கான காரணத்தை முதலமைச்சர் நேரில் விளக்க வேண்டும். அதன் பின்னரே அதை ஆளுநர் ஏற்க வேண்டும் என்பது மரபு. இந்த மரபை முதலமைச்சர் மீறியபோது ஊமை சாட்சியாக ஆளுநர் இருந்தார்.

இருவரின் உறவினர்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் பெறுமான ஒப்பந்தங்கள் தமிழக அரசினால் தரப்பட்டன என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இவற்றில் உண்மை இருக்குமானால் வெறும் இடமாற்றம் மட்டும் போதாது. இருவர் மீதுள்ள குற்றச் சாட்டுகளை விசாரணைக்குட்படுத்தி உரிய தண்டனை வழங்குவதுதான் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், மத்திய அரசு அவ்வாறு செய்யவில்லை. ஊழல் பெருகுவதற்கு இதுதான் காரணமாகும்.

**வினா:** தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதன் காரணம் என்ன ?

- வேலு, புதுக்கோட்டை

**விடை:** அரசியலுக்கு அப்பாற்பட்டு தமிழைக் காக்க சாதி, மத, கட்சி வேறுபாடு இல்லாமல் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்றும் உயரிய நோக்கமே இந்த இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணமாகும்.

என்றுமில்லாத வகையில் தமிழருக்கு மிகப்பெரிய அழிவு திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. வடமொழி என்னும் ஆயதத்தைப் பயன்படுத்தி தமிழை வீழ்த்த முயன்று தோற்றவர்கள் இப்போது ஆங்கிலத்தின் துணை கொண்டு தமிழை அழிக்க முற்படுகிறார்கள். இந்தத் தீய முயற்சியை முறியடிக்க வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழனும் செய்தாக வேண்டும்.

இந்த இயக்கத்தில் பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு, விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் திருமாவளவன் ஆகியோர் இணைந்திருப்பது மற்றொரு வகையில் தமிழர்களை ஒன்றுபடுத்தியுள்ளது.



இரு சமூகங்களிடையே நிலவும் நெடுங்காலப் பகை குறையவும், சிறிது சிறிதாக மறையவும் வழி வகுக்கும். தமிழர் ஒற்றுமைக்குத் தடைக் கல்லாக இருந்துவரும் சாதிச் சனியனின் வீரியம் குன்றும்.

**வினா:** இருமொழித் திட்டம், மும்மொழித் திட்டம் ஆகியவற்றில எது சிறந்தது ?

- ராஜன், சென்னை

**விடை:** மும்மொழித் திட்டம் முழுமையான மோசடித் திட்டம். இருமொழித் திட்டம் ஏமாற்றுத் திட்டம்.

தமிழகத்தில் எழுந்த இந்தி எதிர்ப்புணர்வை மட்டம் தட்ட மும்மொழத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தி பேசாத மக்கள் தங்களின் தாய்மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளைப் படிக்க வேண்டும். இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இந்தி, ஆங்கிலத்தோடு மூன்றாவதாக தென்னாட்டு மொழிகளில் ஒன்றைக் கற்க வேண்டும். ஆனால் நடைமுறையில் எந்த மாநிலமும் மும்மொழித் திட்டத்தை செயற்படுத்தலில்லை.

இருமொழித் திட்டம் என வலியுறுத்துபவர்கள் தமிழோடு ஆங்கிலத்தை கற்க வேண்டும். இல்லையேல் அந்த இடத்தில் ஆங்கிலம் வந்து அமர்ந்து விடும் என பூச்சாண்டி காட்டுகின்றனர்.

பயிற்சி மொழியாக, ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக தமிழ் ஆக்கப்பட்டால் அந்த இடங்களில் இந்தி புகவே முடியாது. ஆங்கிலம் இருக்கும்வரை அதை அகற்றிவிட்டு அந்த இடத்தில் அமர இந்தி உறுதியாக முயற்சி செய்யும்.

இந்தித் திணிப்பைத் தடுப்பதாகக் கூறி ஆங்கில ஆதிக்கத்திற்கு அடி பணியக் கூடாது.

ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்றுக் கொள்வதை யாரும் தடுக்கவில்லை. ஆனால், பயிற்சி மொழியாக ஆங்கிலத்தை ஒருபோதும் ஏற்க முடியாது. ★

## பெண்ணென்னும் பெருங்கவித் தீ!

- கவிஞர் பொன். கௌசல்யா, கோவை -

பேசும் சித்திரம் பெண்ணெனச் சொல்லும் பேதை மானிடனே,
ஓசையெழுப்பும் சமுத்திரம் இவளென உணர்ந்திட மாட்டீரோ?
வீசும் தென்றல் வஞ்சியின் வடிவெனச் சொல்லும் வாலிபனே;
விசையுடன் புறப்படும் புயலாய் இவளும் வெளிப்படக் கண்டாயோ?

கொடியிடை என்றும் துடியிடை என்றும் துஞ்சும் பாவலனே;
தடைகளைத் தகர்க்கும் எரிமலை இவளெனத் தெரியாதிருப்பீரோ?
கயல்விழி என்றும் மான்விழி என்றும் களிக்கும் காளையனே;
ஊழியைத் தாங்கிப் புறப்படும் உக்கிரம் இவளென அறியாதிருப்பீரோ?

பஞ்சுப் பாதப் பாவை இவளெனச் சொல்லும் பாலகனே;
மிஞ்சும் பொழுது நஞ்சைத்தரும் நாகம் இவளென நீயும் அறிவாயோ?
அஞ்சும் விழியின் அஞ்சனம் என அரற்றும் ஆண்மகனே;
செஞ்சுடராகித் தீமைகளெரிக்கும் தீயும் இவளென நீயும் அறிவாயோ?

கண்ணே என்றும் மணியே என்றும் காமுறும் காவலனே;
கணைகளைத் தொடுக்கும் வில்லும் இவளென விளங்கிக் கொள்வீரோ?
பொன்னே என்றும் விண்ணே என்றும் புகழும் புண்ணியனே;
பூவும் ஒருநாள் புயலாய் மாறிடும் மாற்றம் அறிவாயோ!

# தமிழ் செம்மொழி – சில வினாக்கள்!

நடுவண் அரசின் கல்வித் துறையின் அறிக்கையில் காணப்படுவன.

- செம்மொழியாக எந்த ஒரு மொழியையும் அரசு அறிவிப்பது, அம் மொழி வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கவும் அம்மொழிப் புலமையாளருக்கு விருது வழங்கவும், இன்னோரன்ன ஊக்க நடைமுறைகளுக்குமாகவே ஆகும்.
- மைய அரசின் கல்வியமைச்சுத் துறை, 1977 ஆம் ஆண்டு முதலாகச் செம்மொழி வளர்ச்சிக்கெனத் தனியான நிதி ஒதுக்கீடுகளை ஏற்படுத்தியிருக்கிறது.
- 1958 ஆம் ஆண்டு குடியரசு நாளன்று உள் துறை அமைச்சுத் துறை வடமொழி, பாரசீகம், அரபு ஆகிய மொழி அறிஞர்களுக்கு விருதும் பணமுடிப்பும் வழங்கியது.
- 1959 இல் வடமொழி மைய வாரியத்தை நடுவண் அரசு அமைத்து, உச்ச நீதி மன்ற முன்னாள் நீதிபதி பதஞ்சலி சாஸ்திரியை அதன் தலைவராக அறிவித்தது.
- 1960 இல் வடமொழி ஆணையம் அமைக்கப்பட்டது. கல்வி அமைச்சகத் துறையில் மொழிகளுக்கான பிரிவு ஏற்பட்டது. இந்திக்கும் வடமொழிக்கும் நிதி ஒதுக்கும் பிரிவாக இஃது அமைந்தது.
- 1961-62 இல் வடமொழியின் வளர்ச்சி, பெருக்கம், வளமாக்கல் ஆகியவற்றிற்கு ரூ.6,45,000 ஒதுக்கப்பட்டது. இத் தொகை குருகுலங்களுக்கும் தன்னார்வ நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.
- 1962 ஆம் ஆண்டு முதல் மாநில அரசுகள், மற்றும் நேரடி ஆட்சிப் பகுதிகள் மூலம் வடமொழியை வளர்ப்பதற்கானத் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியது.
- 1964 இல் கல்வி அமைச்சகம் இந்தி மொழி வளர்ச்சிக்கெனவும், வடமொழி உள்ளிட்ட இக்கால இந்திய மொழிகள் வளர்ச்சிக்கெனவும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.
- இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதே தலைப்பில் திட்டக் கூறு அமைந்தது.
- வடமொழியைச் செம்மொழியாக அப்பொழுது கல்வி அமைச்சகத் துறை குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத் தக்கது.
- 1970 ஆம் ஆண்டு 'மொழிகளுக்கான பிரிவு' என்பது 'மொழிகளை வளர்க்கும் பிரிவு' என மாற்றப்பட்டது.
- 05.05.1970 இல் வடமொழிக் கல்விக்கும், வளர்ச்சிக்கும் தில்லியிலும், திருப்பதியிலும் இரு நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. பின்னர் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் ஆயின.
- 1972 ஆம் ஆண்டு கல்வி அமைச்சகம் வடமொழி மாநாட்டை நடத்தியது. மற்றும் மாநிலங்களின் கல்வி அதிகாரிகளை அழைத்து வடமொழியைப் பேணவும், வளர்க்கவும், மேம்படுத்தவும் வழிவகைகளை ஆராயும் மாநாடு ஒன்றையும் நடத்தியது.
- 1977 ஆம் ஆண்டு கல்வி அமைச்சகத் துறை மொழி வளர்ச்சிப் பிரிவில் நான்கு தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு செய்தது.

  (1) இந்தி மொழி வளர்ச்சி (2) இக்கால இந்திய மொழிகளின் வளர்ச்சி (3) ஆங்கிலம் மற்றும் பிறநாட்டு மொழிகளின் வளர்ச்சி (4) வடமொழி, அரபு மற்றும் பாரசீகம் ஆகிய செம்மொழிகளின் வளர்ச்சி.
- செம்மொழி என்ற சொல்லாட்சியைக் கடந்த 27 ஆண்டுகளாக கல்வி அமைச்சகத்துறை பயன்படுத்தி வருகிறது.
- 1978 ஆம் ஆண்டு முதலாக கல்வி அமைச்சரின் பரிந்துரையின்படி வடமொழி, அரபு, பாரசீகம் ஆகிய செம்மொழிகளின் புலமையாளருக்குக் குடியரசுத் தலைவர் விருதுகள் கிடைத்து வருகின்றன. 15.8.1978 இல் 97 புலமையாளர்கள் இவ் விருதுகளைப் பெற்றனர்.
- 1981 ஆண்டு முதல் கல்வி அமைச்சகம் இக்கால மொழிகளின் தலைப்பில் துணைத் தலைப்புகளில் உருது மொழி, சிந்தி மொழிகளுக்கு நிதியை ஒதுக்கி வருகிறது.
- 1991 ஆம் ஆண்டு முதல் உருது மொழி, சிந்தி மொழி வளர்ச்சிக்காகத் தனித் தனி வாரியங்கள் அமைக்கப்பட்டன. சிந்தி மொழி பாக்கிஸ்தானில் உள்ள சிந்தி மாநில மொழி என்பது குறிப்பிடத் தக்கது.
- 1994 ஆம் ஆண்டு முதல் வடமொழி, அரபு, பாரசீகம், பாலி, பிராகிருதம் ஆகிய ஐந்து செம்மொழிகளின் புலமைச் சான்றோருக்கு விருதுகளை குடியரசுத் தலைவர் வழங்கி வருகிறார். இதன் மூலம் பாலியையும் பிராகிருதத்தையும் செம்மொழிகளாக மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.
- 1996 இல் உருது, சிந்தி ஆகிய மொழிகளின் வாரியங்கள் தரம் உயர்த்தப்பட்டு, தேசியக் கழகங்கள் ஆயின.
- வட மொழியானது ஒரு செம்மொழி மட்டுமன்று; பாரத் பண்பாட்டுப் பேழையுமாகும். இப் பண்பாட்டுப் பேழையைப் பாதுகாக்க வேண்டும், எங்கும் பரப்ப வேண்டும், இது கட்டாயத் தேவை என இந்திய அரசு கருதுகின்றது.
- 1999-2000 ஆம் ஆண்டு முழுவதையும் சமற்கிருத ஆண்டாகக் கொண்டாட நிதி ஒதுக்கப்பட்டது. மேலும் 2001 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டு நிதி மேலும் ஒதுக்கப்பட்டது.
- 2001-02 நிதி ஆண்டில் செம்மொழியான சமற்கிருதக் கல்விக்கும் வளர்ச்சிக்குமாக ரூ.1,050 கோடியை ஒதுக்கியுள்ளது.
- 2000-2001 நிதி ஆண்டில் அரபு மொழி வளர்ச்சிக்காக ரூ.12 கோடியும், 2001-02 நிதி ஆண்டில் ரூ.10.5 கோடியும் ஒதுக்கப்பட்டது.
- இவ்வாறு கல்வித்துறை (மனித வள மேம்பாட்டுத்துறை)தான் சமற்கிருதம் உள்ளிட்ட மொழிகளைச் செம்மொழிப் பட்டியலில் சேர்த்து, கோடிக்கணக்கில் நிதியும் ஒதுக்கி வருகிறது; அறிஞர்களைச் சிறப்பித்தும் வருகிறது.
- இப்பெரும் பொறுப்புக்களை ஏற்றிருக்கும் கல்வித்துறை, செம்மொழிகள் பட்டியலில் தமிழைச் சேர்க்க முன்வரவில்லை.
- ஆனால், பண்பாட்டுத் துறையின் சார்பில்தான் தமிழ் செம்மொழி அறிவிப்பு வெளிவந்துள்ளது. இந்தப் பாகுபாடு ஏன்?
- சமற்கிருதம் மட்டுமே கல்விக்குரிய மொழியா? தமிழ் கல்விக்குரிய மொழி அல்லவா?
- சமற்கிருத மொழி தேவபாஷை எனவும், தமிழ் சூத்திர மொழி எனவும் மைய அரசு நமக்கு சுட்டிக் காட்டுகின்றதா?
- செம்மொழி எனும் அரசு அறிவிப்புக்கு அடித்தளம் என்ன?

  (1) அரசியல் அமைப்பின் எட்டாவது அட்டவணை

  (2) ஐந்தாண்டுத் திட்டக் கூறு.

  (3) 1986 ஆம் ஆண்டின் தேசியக் கல்விக் கொள்கை ஆகியவைகள் மட்டுமே அரசு அறிவிப்புக்கு அடித்தளமாக இருக்கவேண்டும்.
- நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

  (1) மரபு வழிக் கொள்கை (2) அமைச்சரவை தீர்மானம் (3) அரசாணை (4) பண்பாட்டுத் துறை அமைச்சகத்தின் அறிவிப்பு ஆகியவைகள் செம்மொழியென மைய அரசு ஏற்பதற்கு உரியது ஆகாது என்பதாம்.

நாம் வேண்டுவது என்ன?

2001 ஆம் ஆண்டில் அமைந்த பிரதமர் தலைமையிலான இந்திய மொழிகளுக்கான தேசிய அவை கூட்டப்படவேண்டும். அந்த அவை கூடிக் கல்வி அமைச்சின் செம்மொழிப் பட்டியலில் சேர்க்கவும், நிதி ஒதுக்கீடு செய்யவும் ஆலோசனை வழங்க வேண்டும். இதனை கல்வி அமைச்சகத் துறை நடைமுறைப்படுத்தவேண்டும்.

> "இருப்புக்கொள் ளாமலும்
> எதிர்த்துச்சொல் லாமலும்
> எத்தனைநாள் இருப்பாய் - தம்பி
> எத்தனைநாள் இருப்பாய்?"

என பேராசிரியர் சாலையார் எச்சரிக்கையை நினைவு கொள்வோம், தமிழர்களே!

# திரைத் துறையீரே!

- பூம்புகார் வெ. சோமு -

வீம்பாகத் தமிழ்நாட்டில் திரையின் பெயர்கள்
    வேற்றுமொழி ஆங்கிலத்தில் சூட்டப் பட்டுமே,
வேம்பாகப் பாடல்களில் ஆங்கிலச் சொல்லை
    வேண்டுமென்றே திணித்தெழுதி தமிழைப் புதைத்துத்
தீங்கான வழிநாடும் திரைத்துறை யீரே!
    தீந்தமிழில் இல்லாதொரு சொற்பெய ருண்டோ!
தாங்கினாலும் ஆங்கிலத்தைத் தமிழா நீயும்
    தமிழால்தான் புகழ்பெறுவீர் தமிழன் என்றே!

ஆங்கிலத்தில் பெயர்சூட்டும் தமிழ்த்தாய் மகனே!
    அடிமையாக இருப்பதிலே அத்துணை மகிழ்வோ!
வேங்கைமறத் தமிழர்களின் எழுச்சிப் பிறப்பின்
    வெற்றியினைத் திரையிட்ட நீங்களா இன்றும்
ஆங்கிலத்தில் பெயர்சூட்டி அன்னை மொழியை
    அழித்திடவே அணிதிரண்டு படைஎடுக் கின்றீர்?
தூங்குகின்ற தமிழாநீ விழிப்பது மெந்நாள்?
    தொடர்கின்ற தமிழ்க்கொலையை விடுவது மென்றோ?


பாவலரீர்! தமிழ்ப்பற்றும் எங்கே சென்றது!
    பணத்தாளின் நிழல்பின்னே ஒளிந்து கொண்டதோ!
கூவத்திலே நீரெடுத்துக் குடிக்கும் நீர்லே
    குடங்குடமாய்க் கலந்தபின்னே குடிநீ ராகுமோ!
கூவுங்குயில் சிறப்பென்றால் குரலின் இசையே!
    கொண்டால்தான் தாய்மொழியைக் கவிஞன் அவனே!
பாவரசன் பாவேந்தரைப் படித்த நீங்களா
    பணமுடைக்குத் தாய்மொழியை விற்றுப் பிழைக்கிறீர்!

## தமிழ்த் தூய்மை காத்திடுவோம்!

- கவிஞர் சாந்த. முத்தையா, திருச்சி -


செம்மொழி எம்மொழி சீருடைத் தென்மொழி
தீந்தமிழ் மொழியெனப் பாடிடுவோம் - வடவர்
தம்மொழி திணித்தே தனித்தமிழ் மாய்ப்பதைத்
தமிழின மக்காள் சாடிடுவோம்!
        எம்மொழி மீதும் எமக்குப் பகையிலை
        இயற்றமிழ் வளர்த்திட முனைந்திடுவோம் - எதிரிகள்
        நம்மொழித் தமிழை நசுக்கிடத் துணிகிறார்
        நற்புத்தி புகட்டிட இணைந்திடுவோம்!
"வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?"
வாங்கிப் படித்தே பயனுறுவோம்! - மயங்கி
நொந்து விடாதீர்! நற்றமிழ் மாண்பை
குவலயம் போற்றிடச் செய்திடு வோம்!
        நஞ்சினைக் கலந்து வஞ்சனை செய்தே
        நடிப்பவர் முகத்திரை கிழித்திடுவோம் - இனித்
        துஞ்சிக் கிடந்தது போதும்! தமிழின்
        தூய்மை காத்திடப் புறப்படுவோம்!





'எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம்;
எத்தனை செயல்கள் புரிந்தோம் ?''
என்றா கணக்குப் போடுகிறாய் ?
அட போடா, சோம்பேறி மனிதா;
நீ கண்டுபிடித்த மின்சாரம்
ஒரே விநாடியில் எத்தனை காரியம்
செய்கிறது !
எங்கெங்கோ சுற்றி வந்துவிடுகிறதே,
ஒரு விநாடியில் !
கணக்கைத் திருத்திப் போடு;
எத்தனை விநாடி வாழ்ந்திருக்கிறாய் ?
எத்தனை சாதனை புரிந்திருக்கிறாய் ?

பேராசிரியர் சாலையாரின் வினாக்களுக்கு விடையிருக்கவே ஒரு தகு மனிதர் பிறந்தார். தமிழுக்காக வாழ்ந்தார். 1965 இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போருக்கு மூலமாகத் திகழ்ந்தார். அவர்தான் பேராசிரியர் இலக்குவனார். ஆட்சி மாற்றத்திற்கு அடிகோலிய தமிழ் மறவரை அறிந்து கொள்வோமா ?



# தமிழாக வாழ்ந்த இலக்குவனார்

தஞ்சை மாவட்டம் திருத்துறைப் பூண்டி வட்டத்தில் வாய் மேடு எனும் ஊரில் சிங்காரவேலருக்கும் இரத்தினம் அம்மையாருக்கும் இலக்குவர் 17.11.1910 இல் பிறந்தார்.

இராசாமடத்தில் நடுநிலைக் கல்வி பெறும்போது அறிஞர் சாமி சிதம்பரனார் ஆசிரியராக இருந்தார். சாமி சிதம்பரனார் இலட்சுமணன் என்ற பெயரை 'இலக்குவன்' எனத் தமிழ்ப் பெயராக மாற்றினார். சிதம்பரனாரின் பகுத்தறிவுக் கோட்பாடுகளும், சீர்திருத்தக் கருத்துகளும் தனித்தமிழ் நாட்டமும் இலக்குவரிடம் கால் கொண்டு துளிர்த்தன. இலக்குவனார் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். பெரியாரின் அன்பும் கிடைத்தது. இளம் வயதிலேயே புதியதொரு வழித்தடத்தில் புத்துணர்ச்சியுடன் நடக்கத் தொடங்கினார். புலவர் தேர்வு பெறுவதற்காகத் திருவையாற்று அரசர் கல்லூரியில் சேர்ந்தார்.

அந்நாளில் இலக்குவனார், தன் மாணவத் துணைவர்களாக இருந்த அ.கிருட்டிணமூர்த்தி, அன்பு கணபதி, முருக இலக்குவன் ஆகியோருடன் இணைந்து, ஏக சமயத் தொண்டர்கள் பிரச்சாரம் செய்வது போல், ஊர் ஊராகச் சென்று, தூய தமிழ்ப் பற்றை மக்களிடம் ஊட்ட சொற்பொழிவு செய்து வந்தார்.

கல்லூரியில் மாணவர் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டாலும், கல்லூரி முதல்வர் சுப்பிரமணிய சாத்திரியார் இட்ட முட்டுக் கட்டையால் நிகழ்ச்சிகள் ஏதும் நடத்த முடியவில்லை.

இந்நாளில் இலக்கணப் பயிற்சியிலும், மொழியல் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். பாடல்கள் இயற்றினார். தொல்காப்பியர் காலத்தை ஆய்ந்து கட்டுரை எழுதி இதழில் வெளியிட்டார்.

புலவர் தேர்விலும் கல்லூரியில் முதல் மாணவராகத் தேர்வு பெற்றார்.

புலவர் படிப்பால் பயன் என்ன ?

''தமிழகத்தின் உரிமைக்கும், தமிழ் மொழியின் உயர்வுக்கும், உழைப்பதே எனது உறு கடனாம் என்று உறுதி கொள்ளச் செய்தது. தமிழ்ப்போரே எனது வாழ்க்கைப் போர் என்னும் குறிக்கோளை வாழ்வின் உயிராக ஏற்றுக் கொண்டேன். புலவர் படிப்பால் பெற்ற பயன் இஃதேயாம்''.

- இது இலக்குவனாரின் இலக்கு நோக்கிய மொழியாம்.

அதன்பின், 'தமிழ் மொழியின்



தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார்.

அகவை ஐம்பதைக் கடந்த நிலையில் தொல்காப்பியம் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஆராய்ச்சி முன்னுரையும் எழுதி முனைவர் பட்டமும் பெற்றார்.

அறிஞர் அண்ணா அவர்கள் உலக நாடுகளுக்கெல்லாம் அந்நூலை எடுத்துச் சென்று கொடுத்துப் பேருவகை அடைந்தார். 'யேல்' பல்கலைக் கழகத் திலும் அதனைக் கொடுத்தார். போப் அவர்களிடமும் கொடுத்தார்.

சாதி எனும் வடசொல் தமிழுக்குரியதன்று என்பதை வெளிப் படுத்தும் என்று வலியுறுத்தினார். நெஞ்சக் கலப்பால் நிகழ்ந்த காதல் திருமணத்தையே விரும்பி ஏற்றார். சாதிமை கருதா மணமே 'தமிழர் மணம்' என்பதை நிலை நாட்டினார்.

மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணி புரிந்தார். இக்காலத்தில் தமிழ்க் காப்புக் கழகம் 6.8.1962 இல் தொடங்கப் பெற்றது. 'குறள் நெறி' இதழ் 15.1.1964 அன்று வெளி வந்தது. 'வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க' என்பதுதான் இதழின் கொள்கை மொழியாகும். இந்த இதழ், தமிழ்க் காப்புக் கழகத்தின் விளம்பரப் பலகையாகவும் தமிழ்ப் பற்றாளர்களின் தமிழ் முரசு எனவும் விளங்கியது.

தமிழ்க் காப்புக் கழகத்தின் தலைவராக இலக்குவனாரும், பொதுச் செயலாளராக இளங்குமரனாரும் பொறுப் பேற்றார்கள். புரட்சிக் கவிஞரின் 'தமிழியக்கம்' வெளியிட்டுள்ள கொள்கைகளே இக்கழகத்தின் குறிக்கோள் ஆகும்.

இலக்குவனார் சென்ற இடங்களில் எல்லாம் தமிழ்த் தொண்டே நிகழ்ந்தது. தமிழுக்கு மறுமலர்ச்சி என்பதை அவ்வவ் வட்டாரங்கள் உணர்ந்து போற்றவே கல்வி வளாகங்களிலும், புறப் பகுதிகளிலும் பணி செய்தார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் புதிய அமைப்புகள், மன்றங்கள், கழகங்கள் உருவாகின. ஏற்கனவே இருந்த அமைப்புகள் புதிய பொலிவை அடைந்தன. ஏழைமை நோக்குக்கு இடமாகி இருந்த தமிழ்த் துறையும் தமிழ் வகுப்பும் ஏறு நடையிட்டு எவரையும் ஏறிட்டுப் பார்க்க வைத்தன.

தமிழ்க் காப்புக் கழகத்தின் வேண்டுகோள்தான் என்ன ?

'தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை' என்று இரங்கும் நிலைமை உள்ளது. பேச்சிலே தமிழ் இல்லை; எழுத்திலே தமிழ் இல்லை; ஊர்ப் பெயர், தெருப் பெயர், இல்லப் பெயர், மக்கட் பெயர், வணிக நிலையப் பெயர் இவற்றிலே தமிழ் இல்லை. கல்லூரியில் தமிழ் பயிற்று மொழி ஆதற்குத் தகுதி உண்டா ? அறிவியல் முதலாயவற்றைப் பயிற்றுதற்கான செறிவு உண்டா ? என்று தமிழரே கேட்கும் இழிநிலை உண்டா ?

இந்நிலையில் மொழியை வைத்துக் கொண்டு பழம் பெருமை பேசுவதில் பயன் உண்டா ?

மொழியைக் காத்தவர் விழியைக்
காத்தவர் !

மொழியைச் சிதைத்தவர் விழியைச்
சிதைத்தவர் !

மொழிக்கும் விழிக்கும் வேற்றுமை
இல்லை !

கட்சி, அரசியல், சமயம், சாதிப் பிணைப்புகள் அற்று இயங்குவது தமிழ்க் கழகம், நல்ல தமிழில் எழுத, நல்ல தமிழில் பேச, நல்ல தமிழ் நடைமுறைகளை நாடெங்கும் பரப்ப, நற்றமிழ் நடைமுறைக்கு ஊறு விளைப்பவற்றைத் தடுக்கக் கிளர்ந்தது தமிழ்க் காப்புக் கழகம். இக்கழகத்தின் உறுப்பினராகச் சேருங்கள் ! தமிழ்த் தொண்டு புரிய முனைந்தெழுங்கள் !

உறுப்பினர்கள் சேர்ந்தனர்; கிளைகளும் தொடங்கப்பட்டன. கிழமைக் கூட்டம், சிறப்புக் கூட்டம், தமிழ் வகுப்பு, சான்றோர் விழா, தொடர் பொழிவு, சிறப்பு நிகழ்ச்சி முதலானவை கழகத்தின் சார்பில் நடைபெற்றன.

தமிழ் என்றால் 'பச்சையப்பன்' என்றும் 'அண்ணாமலை' என்றும் நினைக்கப்பட்டது போல, மதுரைத் தியாகராசர் கல்லூரி விளங்கிய காலம் அது.

'தமிழ்நாடு' என்னும் தனிச் சிறப்புடைய இதழ் வெளியிட்டவர்கள் தமிழ் வளர்ச்சியில் ஊன்றியவர்கள், தமிழ் நலமென எவை எவை உண்டோ அவற்றுக்கெல்லாம் இடமாகி வழிகாட்ட நின்ற குடும்பம் அது.

இலக்குவனார் தம் தொண்டுக்கு 'விளைநிலம்' மதுரைத் தியாகராசர் கல்லூரி எனக் கண்டு கொண்டார்; அழுத்தமாக ஊன்றினார். தன் குடியிருப்புக்கு, 'கருமுத்தகம்' எனவும் பெயரிட்டார்.

'மேடையில் இலக்குவனார் ஆவேசமாகப் பேசமாட்டர்; அடுக்கு மொழி அழகு நடை கிடையாது; கொள்கைப் பிடிப்புடைய அமைதியான ஆனால், அழகான பேச்சாக அமைந்திருக்கும். அவரது பேச்சில் குழந்தையின் மனம் வெளிப்படும்; உள்ளொன்று புறமொன்று இருக்காது'.

இந்நிலையில் தமிழ்க் காப்புக் கழகம் இந்தி எதிர்ப்புக் கழகமாகவும் உருவாக நேர்ந்தது. இந்தி எதிர்ப்பை அடக்குவேன் என்றார் முதல்வர் பக்தவச்சலனார். குறள் நெறி இதழ் தமிழ்காப்புடன் இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் வெளி வந்தது, அரசைக் கண்டித்தது.

முதல்வர் பக்தவச்சலம் தமிழ் ஆர்வலர்களைக் கண்காணிக்க உத்தரவிட்டார். குறள் நெறி அச்சகம் சோதனையிடப்பட்டது. சான்றுகள் கிடைத்தன என்று சிலவற்றை எடுத்துச் சென்றனர், காவலர்.

தமிழ் மறவர் இலக்குவனார் மீது, 'அமைச்சர்களைக் கொல்லுவதற்கு முயற்சி' முதலாக பதினான்கு குற்றங்கள் சுமத்தப்பட்டன.

வழக்கு மன்றத்தில், "இலக்குவனார் தமிழ்ப் பற்றாளர் உள்ளம் கவர்ந்தவர்; இதழ் நடத்துபவர்; அவர் வெளியே இருந்தால் அரசுக்கும் அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு இராது" என அரசு வழக்குரைஞர் வாதிட்டார்.

"எந்த அடிப்படையில் இந்த முடிவு செய்கின்றீர்" என்று இலக்குவனாரின் வழக்குரைஞர் வினாவினார். "எனக்குள்ள தெளிவால் கூறுகிறேன்" என்றார், அரசு வழக்குரைஞர்.

"அப்படியானால் சரி; என் தெளிவால் கூறுகிறேன். இம் மாநிலத்திற்குக் கேடு முதல்வர் பக்தவச்சலனாரால் ஏற்படுகிறது. அவரை வெளியே விடாமல் சிறைப்படுத்தினால் கேடெல்லாம் ஒழிந்துவிடும் என்கிறேன். நீங்கள் ஒப்புவீர்களா ? நீதிமன்றம் ஒப்பிச் சிறைப் படுத்த ஆணை தருமா ?" என்றார் இலக்குவனாரின் வழக்குரைஞர் இராம. சுப்பிர மணியனார்.

"ஐயப்பட்டு ஒருவரைக் குற்றவாளியாக்க முடியாது" என்றார் நடுவர். எனினும் "திருநகரை விடுத்து வெளியே செல்லுதல் ஆகாது" என்று ஆணையிட்டார்.

இந்நிலையில் இலக்குவனார், 'தமிழ் உரிமைப் பெருநடை' திட்டம் வகுத்தார். மதுரை தொடங்கிச் சென்னை வரை கால்நடையாகச் செல்வது.

கல்லூரிகள் உள்ள இடங்களை முதன்மையாகக் கருத்தில் கொண்டு மேலூர், திருப்பத்தூர், காரைக்குடி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், சிதம்பரம், கடலூர், புதுச்சேரி, விழுப்புரம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம் முதலிய ஊர்களின் வழியாக நடந்து இப்பெரு நடை அணி சென்னை சென்று அடையும்.

'உயர்நிலைப் பள்ளிகளில் ஒரே காலத்தில் தமிழைப் பாட மொழியாக ஆக்கியது போல், கல்லூரிகளிலும் ஒரே



சமயத்தில் எல்லாத் துறைகளிலும் எல்லா நிலைகளிலும் தமிழைப் பாட மொழியாக ஆக்க வேண்டும் என்று தமிழக முதல்வரையும், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரையும் கண்டு வேண்டுகோள் விடுக்கவே இப்பெரு நடைப் பயணம் ஆகும்.

நடைத்திட்டம் மேற்கொள்ள விடாமல் சிறைப்படுத்த அரசு முனைந்த நிலையில், "தமிழ் மொழிக்காக யாரோ பலியாக வேண்டும்; அவர்களில் நான் முதல் ஆளாக இருக்கிறேன்" என்று புன்முறுவல் பூத்தார்.

01.05.1965 அன்று இரவு இலக்குவனாரைச் சிறைப்படுத்தி வேலூர்ச் சிறைக்கு கொண்டு சென்றனர். மூன்றரைத் திங்கள் காலம் சிறை இருத்திய அரசு, அவர் மேல் வழக்குப் பதிவு செய்யாமலே விடுவித்தது. கல்லூரிப் பணி பறிக்கப்பட்டது.

இலக்குவனார் சிறையிலிருந்த வேளை அன்றைய 'முரசொலி' இதழ், "தமிழ்த் தாய் சிறையில்" என நாலெண்ணிச் சிறைக்குள் இலக்குவனார் இருப்பதாய்ப் படம் போட்டுப் பரப்பியது. (ஆட்சி ஏறிய பின் 'தமிழ்த்தாயை'ச் சிறையிலிட்டு ஆங்கிலத்திற்கு அரியணை தந்தவர்கள் இவர்களே).

சிறை மீண்ட இலக்குவனாருக்கு 09.01.1966 அன்று வழக்கறிஞர் தருமராசு, சந்தோசம் அவர்கள் தலைமையில் அண்ணா உரு.10,001 ஆக பொற்கிழி வழங்கினார். 'தமிழர் தளபதி' என்னும் விருதும் வழங்கிச் சிறப்பித்தார்.

இந்தியைத் திணித்த பக்தவச்சலனார் ஆட்சி கவிழ்ந்து, தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியது. 1967 இல் அண்ணா முதல்வரானார். சென்னை மாநிலக் கல்லூரிப் பேராசிரியராக இலக்குவனார் நியமிக்கப்பட்டார். 1970 இல் தி.மு.க.வின் ஆங்கிலத் தாக்கத்தால், பேராசிரியர் இலக்குவனார் உசுமானியா பல்கலைக் கழகத் தமிழ்த் துறைக்கு நாடு கடத்தப்பட்டார்.

2.10.71 முதல் 25.12.71 முடிய சிங்கப்பூர், மலேயா முதலிய நாடுகளில் மொழி இன நல பொழிவுகள் செய்தார். இந்நாள் வரை ஒதுங்கிக் கிடந்த நோய்கள் ஒன்றொன்றாய்த் தலைதூக்கி எழுந்தன. 3.9.73 இரவு 10 மணியளவில் மதுரை அரசினர் மருத்துவமனையில் இயற்கை எய்தினார்.

'வாழ்க்கைப் போர் இல்லாமை இலக்குவனார் வாழ்வில் ஊடே ஊடே இருந்த காலமும் உண்டு. ஆனால், மொழிப் போர் இல்லா நாள் அவர் வாழ்வில் இருந்ததே இல்லை. அவர் ஒரு தனி மனிதரல்லர். இவர் ஒரு மாபெரும் இயக்கம்.'

இந்தி எதிர்ப்புப் போராலும், தமிழ் உரிமைப் பெருநடைப் பயணத்தாலும் சிறை வாசமும், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான தனிமைச் சிறையும், பதவி இழப்பும் அடைந்த பேராசிரியர் இலக்குவனாரின் ஆக்கப் பணிகளால் ஆட்சிக்கு வந்தன, திராவிட அரசுகள்.

"எந்த நாட்டிலும் அரசியல் வெற்றி ஆட்சி மாற்றம், புரட்சி முதலியவற்றிற்கெல்லாம் தலைவர்களின் கருத்துகளை மக்களிடம் பரப்பி வேராகவும் உரமாகவும் இருப்பவர்கள் அறிஞர்களே. அந்த வகையில் திராவிட இயக்கங்களின் ஆட்சிக்கு வேராகவும் உரமாகவும் இருந்தவர் பேராசிரியர் இலக்குவனார் எனில் எள்ளளவும் ஐயமில்லை" என்கிறார்கள் திறனாய்வாளர்கள்.

இந்தியத் துணைக்கண்டம் மொழி வழிக் கூட்டரசுகள் இணைந்த இந்திய ஐக்கிய நாடுகளாகத் திகழ வேண்டும் என்று எழுதியும் பேசியும் தமிழ்த் தேசிய உணர்வை வளர்த்தார்.


இன்னலுற்று இடர்ப்பட்டுப் பொருள் இழந்து உயர்வுகள் இழந்து வாழ்க்கையையே போர்க்களமாகக் கண்டு வாழ்ந்த பேராசிரியர் இலக்குவனாருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் என்பது தமிழ் முழுமையான கல்வி மொழி என்னும் நிலையை உண்டாக்குவதே யாம்!

(ஆதாரம்: புலவர் இரா. இளங்குமரன் அவர்களின் 'செந்தமிழ்க் காவலர் சி. இலக்குவனார்' நூல்)

# இலக்குவனாரின் வாழ்க்கைப் போர்!

☆ இலக்குவனார் சிறுவனாக இருந்த போது காதுகளில் கட்டையும் கால்களில் காப்புகளும் அணிந்து கொண்டு நீண்ட சடையுடன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றுள்ளார். அப்போது அவர் தலைமுடி சடை பின்னித் தொங்கவிடப்பட்டிருந்தது.

☆ தந்தை காலமாகிவிட நிலத்தை விற்றுவிட வேண்டியதாகிவிட்டது. இந்நிலையில், "யானும் உழுதுள்ளேன்; களை எடுத்துள்ளேன்; நாற்று நட்டுள்ளேன்; அரிவாளால் அறுவடை செய்துள்ளேன்; நெல் கட்டைத் தூக்கிச் சென்று களத்தில் போட்டுள்ளேன்; உழவு வேலை அனைத்தும் செய்துள்ளேன்" என்கிறார் இலக்குவனார்.



மேலும், "மூன்று வேளை உணவு இரண்டு வேளையாகி ஒரு வேளை தான் வயிறார உண்ணும் நாள்களும் இருந்தன. காலையில் கல்விக் கூடம் செல்லும் நான், ஒன்றும் உண்ணாமல் நீராகாரம் மட்டும் உண்டு சென்றுள்ளேன். பிறகு நண்பகல் வந்து தான் உண்பேன். ஒரு நாள் இரவு உணவு கொள்ளும் நேரத்தில் எண்ணெய் இன்மையால் விளக்கேற்றப் பெறவில்லை. வெளிச்சத்திற்காக வைக்கோலைக் கொளுத்தி எரியச் செய்து அதன் ஒளியில் உண்டோம்" என்று பள்ளிப் படிப்புக் காலத்தை நினைவு கூறும் இலக்குவனார், இந்நிலையில் இரவில் படிப்பது எங்கே? என்று வினவுகிறார்.

☆ இலக்குவனாரின் பள்ளிக்கூட விழாவில் 'பேச்சாளர்' "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்னும் குறட்பாவை விளக்கினார். இக்குறள் விளக்கமும், கருத்தும் இலக்குவனார் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டது. அன்றே, 'உலகம் போற்றும் உயர்ந்த நிலை அடைவேன்; சிறந்த சொற்பொழிவாளராக விளங்குவேன்' என்று உறுதி மேற்கொண்டார்.

☆ தஞ்சையை ஆட்சிபுரிந்த சரபோசி மன்னர், வழிப்போக்கர்க்கு உணவு வழங்க நெடுஞ்சாலையில் சத்திரங்களைக் கட்டி வைத்தார். ஏழை மாணவர்கள் கல்வி பெற வேண்டும் என்னும் நன்னோக்கத்தில் ஊர்ப் பெரியவர்கள், அரசர் மடத்தில் உள்ள மோகனாம்பாள் சத்திரத்தையும் உரத்த நாட்டில் உள்ள முத்தம்மாள் சத்திரத்தையும் ஏழை மாணவர் இல்லங்களாக மாற்றினர். அரசர் மடத்தில் நடுநிலைப் பள்ளியும் உரத்த நாட்டில் உயர்நிலைப் பள்ளியும் நடத்தப்பட்டன.

(1924) இப்பள்ளியில் சேர்ந்து படிக்க விண்ணப்பம் ஆயத்தம் செய்து அஞ்சல் தலை ஒட்டாமலே அனுப்பி வைத்தார், இவரின் உறவினர். உண்மையில் அன்று ஒரு காசும் இல்லாத நிலையிலேயே இருந்தார்.

"சரபோசி மன்னரின் அறக்கட்டளையும் அதை ஏழை மாணவரின் கல்விக்குத் திருப்பிப் பயன்படுத்தத் திட்டமிட்ட பெரியோர்களும் இல்லாமல் இருந்திருந்தால் என் நிலை என்னவாக இருந்திருக்கும்? என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான ஏழை மாணவர்களின் நிலை என்ன? அம்மம்ம! நினைத்துப் பார்க்கவே நெஞ்சு நடுங்குகின்றது" என்று நினைத்து உருகும் இலக்குவனாரின் நன்றி மறவா உள்ளத்தை என்னென்பது?



☆ "வாய்மேட்டில் வறுமையால் வாடிக் கல்விக் கோயிலை அடைய முடியாது என வருந்திய யான் சரபோசி மன்னரின் வளர்ப்புப் பிள்ளையாகி விட்டேன். இதிலே சேர்ந்தது முதல் பன்னிரண்டு ஆண்டுகள் மன்னரின் வளர்ப்புப் பிள்ளையாகவே வளர்ந்து கல்விச் செல்வத்தைப் பெற்றேன். மன்னர் சரபோசியையும் என்னை அவர் அறக்கொடைக்கு ஆளாக்கிய அன்புறு பெரியோர்களையும் என்றும் போற்றி வணங்கக் கடமைப்பட்டுள்ளேன்" என்று நன்றியுணர்வைக் கொட்டியுள்ளார்.

☆ இம் மாணவர் இல்லத்தில் வழங்கப்பட்ட உணவு நிலைதான் என்ன?

காலையில் சுடுசோறும், மோரும் தொட்டுக் கொள்வதற்கு ஊறுகாயும் அளிக்கப்பட்டன. நண்பகலிலும் இரவிலும் சோறும் அதற்குத் துணையாக ஒரு கூட்டு, சாம்பார், மிளகு சாறு, மோர் முதலியன பரிமாறப்பட்டன. மூன்று வேளையும் வாழை இலைகளிலேதான் மாணவர்கள் உண்டார்கள்.

☆ அம்மாணவர் விடுதியில் உணவு பரிமாறும் பணிகளில் சமையலாள்களுக்கு மாணவர்களை உதவச் செய்து தொழிலின் மேன்மையை உணரச் செய்தார், இலக்குவனார் பள்ளியின் தலைமையாசிரியர் சோமசுந்தரர்.

☆ "விடுதியில் உணவு மூன்று வகையாக ஆயத்தம் செய்து வழங்கப்பட்டது. பிராமணர்களில் ஐயர்க்கு ஓரிடம்; ஐயங்கார்க்கு ஓரிடம்; பிராமணர் அல்லாத மாணவர்க்குப் பிறிதோர் இடம். ஐயங்கார் மாணவர் உண்ணுவதை ஐயர் மாணவர் பார்த்துவிட்டால் பின்னர்ச் சாப்பிட மாட்டார்; எழுந்து போய்விடுவார். ஐயர் மாணவர் உண்பதைப் பிராமணர் அல்லாத மாணவர் பார்த்துவிட்டால் ஐயர் மாணவர் உண்ணாமல் எழுந்து போய் விடுவார். பிராமணர் அல்லாத மாணவர்களில் முதலியார், சைவ, வேளாள மாணவர்கள் ஏனைய பிராமணர் அல்லாத மாணவர்களில் இருந்து பிரிந்து தனியறையில் உண்டு வந்தனர். அவர்கள் உண்பதையும் பிராமணர்கள், ஏனைய சாதி மாணவர்கள் கண்டுவிடக் கூடாது. அவ்வறைக்கு வெளியே பெரிய கூடத்தில் மற்ற மாணவர்கள் உண்ண வேண்டும். அவர்களிலும் சைவரை, அரைச் சைவராகக் கருதி அவர்களை முதலில் வைத்து உணவு வழங்கப்படும். அவர்களுக்கு உணவு வழங்கி விட்டுத்தான் மற்றவர்களுக்குப் பரிமாற வேண்டும். இவ்வரிசையில் ஆதி திராவிட மாணவர்கள் கடைசியில் உட்கார்ந்திருப்பர். சாதிக் கொடுமை இவ்வாறு தனிச் செங்கோல் செலுத்தியது.

☆ நாட்டாண்மைக் கழகத் தலைவர் பன்னீர்ச்செல்வம் பெரியாரின் பேரன்பராய் அவர் கருத்துகளை நடைமுறைப்படுத்தினார். ஐயர், ஐயங்கார் மாணவர்களை ஒன்றாக்கினார். அடுத்துச் சைவர்களையும் அல்லாதவர்களையும் ஒன்றாக்கினார். யாரும் எங்கும் உட்காரலாம் என்னும் நிலை ஏற்பட்டது.

☆ உரத்த நாட்டு உயர்நிலைக் கல்விக் கூடத்திற்கு எல்லா ஆசிரியர்களையும் பிராமணர் அல்லாதராகவே நியமித்துப் பிராமணர் அல்லாதவர்களும் சிறந்த ஆசிரியர்களாக விளங்குவார்கள் என உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்பது நாட்டாண்மைக் கழகத் தலைவர் பன்னீர்ச் செல்வம் கொள்கை.

☆ "பெரியாருடன் எனக்கிருந்த தொடர்பினாலும் அவர்களிடம் யான் கொண்டிருந்த பற்றுதலினாலும் என்னை 'நாத்திகன்' என்றே பலர் கூறுவர். ஆனால், உள்ளத்தால்

கடவுள் கொள்கையாளன் என்பதைப் பலர் அறியார்" என்கிறார் இலக்குவனார்.

☆ பள்ளி விடுமுறையில் ஏழை மாணவர்கள் தத்தம் வீடுகளுக்குச் செல்லாமல் விடுதியிலேயே தங்கி விடுவர். இலக்குவனாரும் விடுமுறைகளில் வீட்டுக்குச் செல்வதில்லை. "வறுமை நிலையில் இருப்பது நமது குற்றமன்றே. 'உடையாரும் இல்லாரும் இல்லை' என்ற நிலையை உண்டு பண்ணாத மன்பதையினர் குற்றமாகும் அது" என்பார் இலக்குவனார்.

☆ விடுதியில் உண்ணும் வேளையில் உரையாடக் கூடாது என்பது விதியாக இருந்ததால், இலக்குவனார் இவ்வேளையில் திருக்குறள் நூலை எடுத்துச் சென்று குறளைப் படித்து உள்ளத்தில் நெட்டுருப் போட்டுக் கொண்டிருப்பார். என்னை உருவாக்கியதில் பெரும் பங்கு திருக்குறளுக்கு உண்டு என்று பெருமிதம் கொள்கிறார், இலக்குவனார்.

☆ "செங்கற்பட்டில் நிகழ்ந்த பிராமணர் அல்லாதார் மாநாட்டில் தமிழரிடையே ஒற்றுமையை நிலைநாட்ட நெற்றியில் சமயக் குறிகள் ஏதும் அணிதல் கூடாது என்று முடிவு செய்தனர். அம்முடிவு எனக்கும் உடன்பாடாய் இருந்தது. திருநீறு பூசியவரும் திருநாமம் இட்டவரும் ஓரிடத்தில் இருந்தால், வேறுபட்ட இருவர் இருப்பது போல் தோன்றும். நீறு பூசியவர் நீறு பூசியவர்க்கு உதவுவதும் திருநாமம் இட்டவர் திருநாமம் இட்டவர்க்கு உதவுவதும் இரு சாராரும் வேறுபட்டவர்களை வெறுப்பதும் இயல்பான நிகழ்ச்சிகளாகும். ஆகவே, நீறு பூசுவதை நிறுத்திவிட்டேன்" என்கிறார் இலக்குவனார்.

☆ திருவையாற்றில் வடமொழிதான் கற்பிக்கப்பட்டது. வடமொழிக் கல்லூரி என்றே பெயர் இருந்தது. தமிழவேள் உமாமகேசுவரர் ஆய்வுரைக்கு ஏற்ப, வயவர் (சர்) பன்னீர்ச் செல்வம் அங்குத் தமிழும் கற்பிக்க ஏற்பாடு செய்தார். வடமொழிக்கென ஏற்படுத்தப்பட்ட கல்லூரியில் எப்படித் தமிழ் கற்பிக்கலாம் என்று பிராமணர்கள் கிளர்ச்சி செய்தனர். சரபோசியின் மூல ஆவணத்தை நோக்க, நாட்டு மொழி கற்பிக்க என்றே அறக்கட்டளை அமைக்கப்பட்டது தெரிய வந்தது. வடமொழியை அகற்றி விடுவார்களோ என்று அஞ்சி, "வடமொழியும், தமிழ் மொழியும் இந்நாட்டின் கண்கள்; இரண்டும் கற்பிக்கப்படலாம்" என்று கூற முற்பட்டனர். வடமொழிக் கல்லூரி என்னும் பெயரை மாற்றித் "தமிழும் வடமொழியும் கற்பிக்கும் அரசர் கல்லூரி" என்று பெயரிட்டனர்.

☆ "எவ்வளவோ சிறப்புற்றிருந்த தமிழ்நாடு இன்று அதன் பெயரையும் இழந்து சென்னை மாநிலத்தின் ஒரு பகுதியாகக் கிடந்து வாடுகின்றதே என எண்ணி வருந்தும் நிலை அடைந்தேன். தமிழகத்தின் உரிமைக்கும் தமிழ் மொழியின் உயர்வுக்கும் உழைப்பதே எனது உறுகடனாகும் என்று உறுதி கொள்ளச் செய்தது.

"தமிழ்ப் போரே எனது வாழ்க்கைப் போர்" என்னும் குறிக்கோளை வாழ்வின் உயிராக ஏற்றுக்கொண்டேன். புலவர் படிப்பால் பெற்ற பெரும் பயன் இஃதேயாம்.

பேரா. இலக்குவனாரின் 'என் வாழ்க்கைப் போர்' நூலிலிருந்து.



# இதழாளர் இலக்குவனார்



தாம் நடத்தி வந்த இதழ்கள் வாயிலாக வலியுறுத்தியவைகள்:

1. இனிய எளிய தமிழ் நடை.
2. அயல்மொழிக் கலப்பால் தமிழ் நாட்டின் எல்லை சுருங்கியதை உணர்ந்து பிறமொழிக் கலப்பு இன்றியே எழுத வேண்டும்.
3. இந்தி முதன்மை தமிழுக்கே அழிவு. எப்பாடுபட்டேனும் இந்தி முதன்மையைத் தடுத்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு மொழிக்கும் அதன்தன் எழுத்தே உடலாகும். உடலாம் எழுத்தை அழித்தபின் உயிராம் மொழி வாழ்வது எங்ஙனம்? எனவே இந்திய மொழிகள் அனைத்தும் இந்தி மொழி என்பதாம் தேவநாகரி யில் எழுதப்பட வேண்டும் என விதிக்கும் நடுவணரசின் முயற்சியை எப்பாடு பட்டேனும் தடுக்க வேண்டும்.
5. மக்களாட்சியில் கிளர்ச்சி என்பது நோய்க்கு மருந்து போன்றதாகும். ஆட்சியாளரின் பொறுப்பை உணர்வதற்குக் கிளர்ச்சிகள்தாம் கைகண்ட மருந்தாய் உலக முழுவதும் காணப் பெறுகின்றன. எனவே, கிளர்ச்சிகளுக்கு எதிராக அரசு அடக்கு முறையைப் பயன்படுத்தக் கூடாது. கிளர்ச்சிகளுக்குக் காரணமானவற்றை நீக்க வேண்டும். அவ்வாறு நீக்க முன்வந்தால் கிளர்ச்சியாளர்கள் அரசின் உறுதி மொழிகளை ஏற்றுப் போராட்டங்களைக் கைவிட வேண்டும்.
6. வாழ்வியல் நூலாம் தொல்காப்பியத்தையும், வாழ்க்கை நெறி நூலாம் திருக்குறளையும் கண்களாகக் கொண்டு போற்றி முழுமையாய்ப் படித்துப் பின்பற்றி வாழவேண்டும்
7. சங்க இலக்கியக் காலம் நம் பொற்காலம். சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்ப வேண்டும்.
8. பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கூடாது. அனைத்துத் துறைகளிலும் அனைத்து நிலைகளிலும் தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.
9. தமிழ்ப் பெயரே சூட்ட வேண்டும். தமிழிலேயே எழுத வேண்டும். தமிழிலேயே பேச வேண்டும்.
10. ஆசிரியக் கூட்டரசு, உலகக் கூட்டரசு என்ற படிநிலைகள் வரவேண்டும். எனவே இந்தியா, இந்தியக் கூட்டரசாகத் திகழவேண்டும். தன்னுரிமையுடைய மாநிலங்களின் கூட்டரசு 'இந்தியக் கூட்டரசு நாடுகள்' என்ற வகையில் திகழ வேண்டும்.
11. நீதிமன்ற மொழியாகவும், அலுவல் மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் அனைத்து நிலை மொழியாகவும் தமிழ் இருத்தல் வேண்டும்.
12. மூடநம்பிக்கைகளை ஒழித்துப் பகுத்தறிவோடு வாழவேண்டும்.
13. வண்டமிழை வட்டார மொழி என்று கூறற்க.
14. தமிழர்க்குத் தேசிய மொழி தமிழேயாகும்.
15. நடுவணரசுடன் தமிழ்மக்கள் தமிழிலேயே தொடர்பு கொள்ள ஆவன செய்யவேண்டும்.
16. வேண்டிய மொழிகளை விரும்பிக் கற்கலாம். ஆனால், இந்திதான் தேவை என்ற சூழலை உருவாக்கி விட்டு, இந்தியைப் பெரும்பான்மையோர் விரும்பிக் கற்கிறார்கள் என்ற போர்வையில் இந்தியை இங்கே பயிற்றுவிக்கக் கூடாது.
17. செய்தியிதழ்கள் செந்நெறி போற்ற வேண்டும்.
18. தமிழை அழிவிலிருந்து மீட்க இதழ்கள் அயல்மொழிக் கலப்பின்றியே எழுத வேண்டும்.
19. செந்தமிழைக் காப்போர்க்கே தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.
20. ஒரு மொழி, ஒரு சமயம், ஒரே நாடு என்பன நம்மை அழிப்பன.

'தன்மானத் தமிழ் மறவர் இலக்குவனார்' நூலிலிருந்து.



# பேராசிரியர், முனைவர் சி. இலக்குவனார்

## (17.11.1910 - 03.09.1973)

செய்யுள்: 1) எழிலரசி 2) தமிழிசைப் பாடல்கள் 3) மாணவர் ஆற்றுப்படை 4) துரத்தப்பட்டேன் 5) அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து.

ஆராய்ச்சி நூல்கள்: 1) அம்மூவனார் 2) எல்லோரும் இந்நாட்டு மன்னர்-பகுதி1 3) எல்லோரும் இந்நாட்டு மன்னர்-பகுதி2 4) அமைச்சர் யார்? 5) வள்ளுவர் வகுத்த அரசியல் 6) வள்ளுவர் கண்ட இல்லறம் 7) தொல்காப்பிய ஆராய்ச்சி 8) தமிழ் கற்பிக்கும் முறை.

வரலாறு: 1) இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்) 2) கரும வீரர் காமராசர் 3) என் வாழ்க்கைப் போர் (இளமைப் பருவம்).

விளக்கவுரைகள்: 1) மாமூலனார் காதற் காட்சிகள் 2) திருக்குறள் எளிய பொழிப்புரை 3) தொல்காப்பிய விளக்கம்.

பெற்ற பட்டங்கள்: 1) முத்தமிழ்க் காவலர் 2) செந்தமிழ் மாமணி 3) பயிற்சி மொழிக் காவலர் 4) தமிழர் தளபதி 5) தமிழ் காத்த தானைத் தலைவர் 6) இலக்கணச் செம்மல்.

வெளியிட்ட இதழ்கள் (தமிழ்): 1) சங்க இலக்கியம் (கிழமை இதழ்) 2) இலக்கியம் (திங்களிருமுறை இதழ்) 3) திராவிடக் கூட்டரசு (திங்களிருமுறை இதழ்) 4) குறள் நெறி (திங்களிருமுறை இதழ்) 5) குறள் நெறி (நாளிதழ்).

வெளியிட்ட இதழ்கள் (ஆங்கிலம்): 1) Dravidian Federation (திங்களிருமுறை இதழ்) 2) Kural Neri (திங்களிருமுறை இதழ்)

பேராசிரியரைப் பற்றிய அடைமொழிகள்: 1) தமிழ் அரிமா 2) தமிழ்ப் போராளி 3) 20 ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியர் 4) இரண்டாம் நக்கீரர் 5) பெரும் பேராசிரியர் 6) தன்மானத் தமிழ் மறவர் 7) இந்தி எதிர்ப்புப் படைத் தளபதி 8) செந்தமிழ்ப் படையின் மானச் செம்மல்.

## பயிற்று மொழிக்காக எழுச்சி நடை நெடும்பயணம்!

அன்னைத் தமிழைக் கல்வி மொழியாக்கும் முயற்சியில் மனித நேயப் பாசறையின் ஆட்சிக் குழுத் தலைவர் க.இரா.முத்துச்சாமி அவர்கள் தலைமையில், அறிவியக்கத் தமிழ் வேழம் சாலையார் அவர்களின் நினைவுநாளான 4.10.2004 அன்று பட்டினிப்போர் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. கோவை ஞானி அவர்களின் வேண்டுகோளின்படி இப்பட்டினிப் போர் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், "ஐந்தாம் வகுப்பு வரையிலும் தமிழ் மொழியே, பயிற்று மொழியாக இருக்கவேண்டும்" என்ற நியாயத்தைத் தமிழ்நாடு முழுவதும் எடுத்தியம்ப விரைவில் 'எழுச்சி நடை நெடும்பயணம்' மேற்கொள்வது என்றும் நெடும் பயணத்தின் நிறைவில், பட்டினி அறப்போர் நாள் அறிக்கப்பட முடிவு செய்துள்ளோம்.

நெடும் பயணத்தில் பங்கேற்க விரும்பும் தமிழ் உணர்வாளர்கள், கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொலைபேசி — க.இரா.முத்துச்சாமி
98422 16388 — மு. சக்திவேல்
0421-2240979 — மனிதநேயப் பாசறை
எண்.216 மங்கலம் சாலை,
திருப்பூர்-641 604.



## தமிழ் நாவலர் ஆங்கிலக் காவலர் ஆனது எப்போது?

தி.மு.க. ஆட்சிக்காலம். கோவையிலே ஒரு மாநாடு. பேராசிரியர் இலக்குவனார், அம் மாநாட்டுத் தலைவர். மாநாட்டில் சொற்பொழிவாற்றிய நாவலர் நெடுஞ்செழியனார் அவர்களின் உரை ஆங்கில மொழிக்கு முன்னுரிமையாக இருந்தது. தலைவர் இலக்குவனார், "தமிழ் நாவலர் ஆங்கிலக் காவலர் ஆனது எப்போது? என வினாவினார். இடையே செல்ல எழுந்த நாவலரை "யான் தலைவன் என்னும் நிலையில் ஆணையிடுகிறேன், கூட்டத்தின் நிறைவு வரை இருந்து செல்க" என்றார். இதற்குக் கிடைத்த பரிசு என்ன? தி.மு.க. அரசு இலக்குவனாரை உசுமானியா பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைக்கு அனுப்பி வைத்து நாடு கடத்தியது.

## பேராசிரியரின் தமிழ் மக்கள்!

பேராசிரியரின் மக்கள் பொறிஞர், தமிழ்ப் பேராசிரியர், மருத்துவர், அரசு தமிழ்க் கலைப் பண்பாட்டுத் துறைஞர் எனத் தத்தம் சீர்விளங்க இருத்தல் அவர்தம் தகவினை நாட்டும் சிறப்பினதாமாம்.

திருவேலன் - இந்திரா (எ) செல்லம்மாள்
மறைமலை - சுபத்திரை
திருவேங்கடம் - பரிமளம்
திருவள்ளுவன் - அன்புச் செல்வி
மதியழகி - மனோகரன்
நல்லபெருமாள் - மல்லிகை
செல்வமணி - தினகரன்
நாகவல்லி - கந்தநாதன்
அங்கயற்கண்ணி - தியாகராசன்
அருட்செல்வி - தில்லைநாயகம்
அம்பலவாணன் - மணிமேகலை



## தொல்காப்பியர் விழா! திருவள்ளுவர் விழா!

நாகர்கோயில் இந்துக் கல்லூரி முதல்வராகப் பொறுப்பேற்ற 1958 இல் தொல்காப்பியர் விழாவும் திருவள்ளுவர் விழாவும் எடுத்து அந்நகரத்து மக்களை வியப்பில் ஆழ்த்தினார்.

செண்டை, சிலம்பு, மேளதாளங்கள், மயில் ஒயில் ஆட்டங்கள் நிறைந்த ஒரு கல் அளவு நீண்ட, இலக்கிய ஊர்வலம் ஒன்று நடத்திக் காட்டினார். கோட்டாறு நாகர்கோயில் போன்ற நகரத்து வாழ் மக்களும் மாணவரும் ஆயிரக்கணக்கில் இவ்விழாக்களில் கலந்து கொண்டனர். பொருளுதவியும் செய்தனர்.

## சீர்மிகு செயல்!

மொழியைப் பேணிப் புரந்து வளர்ப்பதற்கெனப் புலவர்கள் கழகம் அமைத்த சீர்மிகு செயல் உலகிலேயே தமிழகத்தில்தான் முதன் முதல் நிகழ்ந்துள்ளது. அந்நிகழ்ச்சியும் கிறித்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்டுள்ளது.

- பேரா. இலக்குவனார், 'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்'

## நன்கொடையாளர்

| | |
|---|---|
| நாத்திகன் கேசவன் | உரு. 100 |
| வ. வேம்பையன், மறைமலைநகர். | உரு. 50 |
| வி.சி. வேலாயுதம், பெங்களூர் | உரு. 250 |

நன்றி

கவிஞர்கள் கவிதைகளை 24 வரிகளுக்கு மேற்படாமல் எழுதி அனுப்ப வேண்டும்.
- ஆசிரியர், 'யாதும் ஊரே'



## புலவுக் கடையில் திருவள்ளுவர் விழாவா?

மதுரையில் அம்சவல்லி உணவு விடுதி, புலவுக் கடைகளில் புகழோடு விளங்கியது. இவ் விடுதியின் உரிமையாளர் கோபால்(பிள்ளை) இலக்குவனாரின் மேல் பேரன்பு கொண்டவர். இவ்விடுதி இலக்குவனாரால் தொடங்கி வைக்கப்பட்டது. இவ்விடுதியின் மாடியில் திருவள்ளுவர் விழா, இராசராசன் விழா நிகழ்ந்தன.

'என்ன ! புலவு வெறுத்த திருவள்ளுவருக்குப் புலவுக்கடை மாடிப் பூங்காவில் விழாவா ?' எனச் சிலர் வினா எழுப்பினர்.

இவ்வினாவிற்கு இலக்குவனார் கூறிய மறுமொழி என்ன தெரியுமா ?

"திருக்குறளில் 'புலால் மறுத்தல்' என்னும் ஓர் அதிகாரம் நீங்கிய 132 அதிகாரங்களுக்கும் உரிமையாளர் கோபால் (பிள்ளை). ஆனால், இதனைச் சொல்பவர்கள் எத்தனை அதிகாரங்களுக்கு உரிமையானவர்கள் என்று சொல்வார்களா ?" என்று எதிர் வினா விடுத்தார்.

---

## வள்ளுவர் நெறி

நாம் வேண்டா வெறுப்பாக வள்ளுவரின் படங்களைத் திறந்தும் படிவங்கள் அமைத்தும் விடுமுறைகள் விட்டும் அப்பெருந்தகை மேல் பற்றுக் கொண்டுள்ளார் போல் நடிக்கத்தான் முயல்கின்றோமேயன்றி, அவர் காட்டிய நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு முற்படுகின்றோமில்லை.

எல்லோரும் இன்புற்று வாழ ஒரே வழிதான் உண்டு. அவ் வழி வள்ளுவர் நெறியை மனமொழி மெய்களால் பின்பற்றுவதேயாகும்.

– குறள்நெறி 15.6.1966

---

## தமிழ் அமைச்சர் வேண்டும்!

மைசூர் மாநிலம் இரு மொழி பேசும் மாநிலம். தமிழர்கள் மூன்றில் ஒரு பங்கு இருக்கிறார்கள். எனவே, மைசூர் மாநிலத் தமிழர்களின் உரிமையைக் காக்கத் தமிழ் அமைச்சரை அரசு நியமிக்கத் தமிழர்கள் கேட்கவேண்டும். அது உங்கள் உரிமை. அதைக் கேட்க அஞ்சவேண்டியதில்லை.

– பேரா. இலக்குவனார், பெங்களூர்த் தனித்தமிழ் மாநாடு (குறள்நெறி 1.4.66)

---

## ஆசிரியர் கருத்துக்கும் மறுப்பு!

கல்லூரி வகுப்புகளில் ஆசிரியர்கள் தமிழின் தொன்மை பற்றியும், தூய்மை பற்றியும் தவறான கருத்துகளைச் சொல்வார்களானால், இலக்குவனார் உடனே எழுந்து விடுவார் ! 'ஏது காரணம் ?' என வினவுவார். எதன் அடிப்படையில் கூறுகிறீர்கள் ? எனக் கேட்பார். தவற்றைத் திருத்திக் கொள்ளாத வரை, ஆசிரியராயிற்றே என விட்டுவிட மாட்டார் ! மறுப்பதோடு நின்று விடாது, கேட்டதோடு விட்டுவிடாது, தமது மறுப்புக்குரிய அடிப்படையான கருத்துகளையும், விளக்கத் துணிந்து விடுவார். வகுப்பு ஓர் ஆய்வுக் களமாக உருவாக்கம் பெற்றுவிடும்.

– புலவரேறு குன்றக்குடி பெரிய பெருமாள்

---

## வையாபுரியாருக்கு மறுப்பு!

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் திருக்குறள் பற்றிய தவறான கருத்துகளை அவர் வாழ்ந்த காலத்திலேயே மறுத்து, முறையான கருத்துகளை நிலைநாட்டிய பெருமை இலக்குவனாரையே சாரும்.

– மறைமலைநகர் வ. வேம்பையன்



## இவர்தான் இலக்குவனார்



"ஒளி படைத்த கண்; உறுதி கொண்ட நெஞ்சு; களி படைத்த மொழி; கடுமை கொண்ட தோள்; தெளிவு பெற்ற மதி; சிறுமை கண்டு பொங்கும் உணர்வு; எளிமை கண்டு இரங்கும் அருள்; ஏறு போல் நடை; நேர்மையுற்ற சிந்தை; நோய்கள் அற்ற உடல்; கற்றது ஒன்று பொய்க்காமை; கருதியது இயற்றுதல் - இக்கருத்துப் பொருள்களையெல்லாம் ஒன்றாகக் கூட்டி வண்ண ஓவியம் வனப்புறத் தீட்டி வைத்தாற் போன்ற திருவுருவினர் பெரும் பேராசிரியர் சி. இலக்குவனார்.

ஆறடி உயரம், முழந்தாளைத் தொடும் கை, தும்பைப் பூ போன்ற மேலாடை, அதனை ஒத்த முழுக்கைச் சட்டை, நல்ல வெள்ளுடை, கவர்ச்சி மிக்க மீசை, எடுப்பான நெற்றி, அமைந்த ஆழமான பார்வை, புன்முறுவல் சுரக்கும் மலர் முகம், கனிவு மிக்க நோக்கு, உள்ளொன்று புறமொன்று அறியா உரை, பகை எண்ணாப் பரிவு, தீயதை உடன் மறக்கும் திருவுளம், இங்கு அங்கு இவர் அவர் என்று எண்ணாமல் எங்கும் எவர்க்கும் ஐயம் அகற்றித் தெளிவிக்கும் தேர்ந்த நடையிடும் பல்கலைக்கழகம் இலக்குவனார்.

- தமிழ்க்கடல், புலவர் இரா. இளங்குமரனார்

---

## ஆங்கிலத்தில் பேசாதே!

கல்லூரி ஆசிரியர் கூட்டத்தில் கல்லூரி முதல்வர் ஆங்கிலத்தில் பேச முற்பட்டபோது, பேராசிரியர்களுள் இலக்குவனாரே துணிச்சலாக எழுந்து நின்று, 'என்னருமைத் தமிழ்நாட்டின் தாய்மொழி தமிழ் என்பதைக் கல்லூரி முதல்வர் அறிவாரா ?' என்று கேட்டுப் புரட்சி செய்தார்.

---

## போர்! போர்!!

"என் வாழ்க்கையே தமிழ் நலம் நாடிய போராட்டக் களந்தான். இளமையில் வறுமையோடு போராடினேன். சாதியோடு போர்; சமயத்தோடு போர்; மூடநம்பிக்கைகளோடு போர்; தமிழ் உரிமைக்காகப் போர் ! போர் ! என்றும் ஓயாத போர்தான். ஆகவே, 'என் வாழ்க்கை வரலாற்றை என் வாழ்க்கைப் போர் என்றேன்' என்றார் பேராசிரியர் தம் எழுத்தில்.

---

## தமிழ்க் காப்புக் கழகம்

கழக நோக்கங்கள்:

1. பிழையற்ற தமிழில் பேசவும் எழுதவும் வேண்டும் என்னும் கொள்கையைப் பரப்புதல்
2. நல்ல தமிழ் வளர்ச்சிக்கு ஊறு செய்யும் நடைமுறைகளைத் தடுப்பதற்கு ஆவன செய்தல்.
3. அரசியல், சமயம், கட்சி, சாதி முதலியவற்றின் சார்பற்று இயங்குதல்.

வழிமுறைகள்: 1) சொற்பொழிவு, வெளியீடு, மாநாடு ஆகிய இவற்றின் துணை கொண்டு செயலாற்றுதல். 2) ஊர்தோறும் கிளைக் கழகங்கள் அமைத்தல்.

உறுப்பினர்: கழக நோக்கங்களுக்கு உடன்படுவோர் அனைவரையும் உறுப்பினராகச் சேர்த்தல்.

இக்கழகத்தின் தொடக்கவிழா 6.8.1962 அன்று மதுரையில் நடைபெற்றது. பேரா.மு.வ. தொடக்கி வைத்தார்.

---

## மறைமலையடிகள் அஞ்சல் தலை வெளியிடுக!

தனித்தமிழ் இயக்கத் தந்தை, தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் புலமை செறிந்த மூதறிஞர், தமிழ்க்கடல் மறைமலை அடிகளாருக்கு அஞ்சல் தலை வெளியிடுவதற்கு ஆவன செய்யுமாறு மத்திய அரசையும் மாநில அரசையும் வள்ளுவர் மன்றமும் பெரியார் அண்ணா இலக்கியப் பேரவையும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன.